**வாக்குமூலம்**
**குற்றவியல் நடுவர் நீதிமன்றம், அறந்தாங்கி**
**வழக்கு எண். MC 3/2022**
**வழக்கு சாட்சி. ம.சா.1**

| | | | |
|---|---|---|---|
| **பெயர்:** | சரோஜினி | **ஜாதி:** | |
| **தந்தை பெயர்:** | க/பெ.ரமேஷ்குமார் | **தொழில்:** | |
| **கிராமம்:** | | **சமயம்:** | |
| **தாலுக்கா:** | | **வயது :** | 31/2024 |

**27.03.2024**
எதிர் மனுதாரர் ஆஜர்.

**சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டார்.**

**குறுக்கு விசாரணை**

நான் பிறந்து வளர்ந்தது அனைத்துமே அறந்தாங்கி பள்ளிவாசல் தெரு என்றால், ஆமாம். தற்போதும் நான் பள்ளிவாசல் தெருவில்தான் குடியிருந்து வருகிறேன் என்றால், ஆமாம். திருமணத்தின்போது எதிர் மனுதாரர் எங்கு குடியிருந்தார் என்றால், அறந்தாங்கி அங்காளம்மன் கோவில் தெருவில் குடியிருந்து வந்தார். எனது வீட்டிற்கும் அவரது வீட்டிற்கும் அரை கிலோமீட்டர் தூரம் இருக்கும் என்றால், சரிதான். எனது கணவர் உறவினரா என்றால், இல்லை. இருவீட்டார் சம்மதத்துடன் பேசி முடிவு செய்துதான் திருமணம் நடைபெற்றது என்றால், ஆமாம். நான் என்ன படித்துள்ளேன் என்றால், எம்.ஏ.பொருளாதாரம். நான் எங்கு வேலை பார்க்கிறேன் என்றால், வேலை பார்க்கவில்லை. நான் மாருதி நர்சரி பள்ளியில் வேலை பார்க்கிறேன் என்றால், இல்லை. நான் வசிக்கும் வீடு எனது அப்பா அம்மாவுடைய சொந்த வீடு என்றால், ஆமாம். அப்பா என்ன வேலை பார்க்கிறார் என்றால், நகை வேலை. தற்போது பார்க்கவில்லை. எனது கணவர் குடியிருக்கும் வீடு சொந்த வீடா என்றால், வாடகை வீடு. எனது கணவர் திருமணத்திற்கு முன்பு எங்கு வேலை பார்த்தார் என்றால், குவைத்தில். எனது உடன் பிறந்தவர் எத்தனை பேர் என்றால், ஒரு தம்பி. அவர் என்ன செய்து வருகிறார் என்றால், ஐ.டி.கம்பெனியில் வேலை பார்த்து வருகிறார். திருமணம் ஆகிவிட்டதா என்றால், இல்லை. எனது கணவருடன் உடன் பிறந்தவர்கள் எத்தனை நபர்கள் என்றால், இரண்டு தங்கைகள். அவர்களுக்கு திருமணமாகிவிட்டதா என்றால், ஒருவருக்கு ஆகிவிட்டது.

2) எனது மாமனார் மாமியாருக்கு வயது 65, 70 இருக்கும் என்றால், ஆமாம். எதிர் மனுதாரர் ஒரே ஆண் பிள்ளை என்றால், ஆமாம். அவர்தான் அவருடைய குடும்பத்தை நிர்வாகம் செய்து வருகிறார் என்றால், ஆமாம். எனது மாமனார், மாமியார் உடல் நிலை சரியில்லாத நபர்கள் என்றால், இல்லை. எனது மாமனார் சிகிச்சை எடுத்துக்கொண்டாரா என்றால், இல்லை. எனது மாமனார் எனது திருமணத்திற்கு முன்பிருந்தே உடல் நிலை சரியில்லாமல் சிகிச்சை எடுத்து வருகிறார் என்றாலும், நான் இல்லை என பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. எனது மாமியார் முதுகு தண்டு சிகிச்சை மேற்கொண்டுள்ளார் என்றால், சரியல்ல. எனது மாமியார் அறுவை சிகிச்சை மேற்கொண்டு எந்த வேலையும் செய்ய முடியாமல் வீட்டில் இருந்து வருகிறார் என்றால், சரியல்ல. எனது கணவர் திருமணமாகி எத்தனை நாட்கள் கழித்து வெளிநாட்டிற்கு சென்றார் என்றால், 45 நாட்கள். நான் எனது கணவர் வெளிநாட்டிற்கு சென்ற பிறகு எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டேன் என்றால், இல்லை. அவர் வீட்டில்தான் இருந்தேன். நான் எனது அம்மா வீட்டிற்கு சென்றதை அறிந்த எனது கணவர் என்னிடம் கேட்டபோது அவர் வந்த பின்புதான் செல்வேன் என கூறினேன் என்றால், சரியல்ல. அவர் வீட்டில்தான் இருந்தேன். வலியுறுத்திக் கேட்டதால் நான் எனது கணவர் வீட்டிற்கு சென்றுவிட்டு மீண்டும் எனது அம்மா வீட்டிற்கே வந்து விட்டேன் என்றால், இல்லை.

3) நான் எப்போது கர்ப்பமானேன் என்றால், அவர் வெளிநாடு செல்வதற்கு முன்பே ஐம்பது நாட்களில் ஆகிவிட்டேன். 2018 ஆம் ஆண்டு ஜீலை மாதம் நான் கர்பமானேன் என்றாலும், நான் எனது கணவர் வீட்டில் இருந்து எனது அம்மா வீட்டிற்கு சென்றுவிட்டதால் குவைத்திலிருந்து எனது கணவர் இங்கு வந்து என்னை சமாதானம் செய்து எனது மாமியார் வீட்டில் கொண்டுபோய் விட்டார் என்றால், இல்லை. நான் எனது கணவர் வீட்டில்தான் இருந்தேன். அவர்தான் என்னை முதலில் மருத்துவரிடம் அழைத்துச் சென்றார். எனது கணவர் என்னை சமாதானம் செய்து வீட்டில் விட்டபிறகும் நான் மீண்டும் எனது அம்மா வீட்டிற்கே சென்றுவிட்டேன் என்றால், சரியல்ல. 2018, நவம்பர் மாதம் எனது அம்மா வீட்டிற்கு சென்ற நான் மீண்டும் எனது கணவர் வீட்டிற்கு திரும்ப வரவில்லை என்றால், சரிதான். எனக்கு திருமணமாகும்போது வயது என்னவென்றால், 27. அவருக்கு எத்தனை வயது என்றால், 31 வயது. சரியாக தெரியவில்லை. நான் 31 என பொய்யாக கூறுகிறேன் என்றாலும், எனது கணவருக்கும் எனக்கும் எட்டு வயது வித்தியாசம் உள்ளது என்றாலும், அதனை காரணம் காட்டி நான் பிரச்சனை செய்துவந்தேன் என்றால், சரியல்ல.

4) நான் எதனால் எனது கணவரைவிட்டு தனியாக வாழ்கிறேன் என்றால், வரதட்சணை கொடுமை செய்தார். 4 1/2 கிலோ வெள்ளி ஜாமான் கொடுத்தோம். பத்தவில்லை என கூறினார். வீடு வாங்கித்தர கூறினார். குழந்தை அவருக்கு பிறக்கவில்லை என கூறினார். அவரது அம்மா, தங்கைகள் என்னை அசிங்கமாக பேசினார்கள். கலேஜில் நான் வேறு ஒரு நபருடன் தொடர்பில் இருந்ததாகவும், குழந்தை அவருடையது அல்ல என கூறினார்கள். நான் போலிசில் 2018 ல் இருந்து மேற்படி காரணங்களை கூறி புகார் அளித்தேனா என்றால், அளித்துள்ளேன். எப்போது அளித்தேன் என்றால், சரியாக ஞாபகம் இல்லை. 2018 ல் இருந்து அவருடன் சேர்ந்து வாழ்வதற்கு நடவடிக்கை எடுத்தேனா என்றால், பெரியோர்களிடம் கூறி பேசினோம். ஒத்துவரவில்லை. எழுத்து மூலமாக சேர்ந்து வாழ நடவடிக்கை எடுத்தோமா என்றால், இல்லை. எனது கணவர் எனக்கு எப்போது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பினார் என்றால், 05.03.2020. அதற்கு நான் பதிலறிவிப்பு அனுப்பினேனா என்றால், அனுப்பினேன். 16.03.2020 அன்று அனுப்பினேன். நான் காவல் நிலையத்தில் வழக்கறிஞர் அறிவிப்பிற்கு பின்னர் புகார் அளித்தேனா அல்லது எனத பதில் அறிவிப்பிற்கு பின்பு அளித்தேனா என்றால், அவரது அறிவிப்பிற்கு பின்னர் அளித்தேன். நான் காவல் நிலையத்தில் எத்தனை புகார் அளித்தேன் என்றால், இரண்டு. எந்த புகார் முதலில் அளித்தேன் என்றால், வரதட்சணை புகார் முதலில் அளித்தேன்.

5) வரதட்சணை புகார் அளித்ததில் இருந்தது எத்தனை நாட்கள் கழித்து என்னை அடித்துவிட்டதாக புகார் அளிததேன் என்றால், சரியாக ஞாபகமில்லை. வரதட்சணை புகாரில் போலிசார் விசாரணை செய்தார்களா என்றால், விசாரணை செய்தார்கள். என்ன முடிவு ஆனது என்றால், அவர் எதற்கும் ஒத்துவரவில்லை. என்னுடைய வரதட்சணை புகாரை புதுக்கோட்டை சமூக நலத்துறைக்கு அனுப்பி வைத்தார்கள் என்றால், ஆமாம். அங்கு விசாரணை செய்தார்களா என்றால், அவரது அப்பா, அம்மா மட்டும்தான் வந்தார்கள். அவரது பையன் வந்த பிறகுதான் முடிவு செய்யமுடியும் என கூறிவிட்டார்கள். அவர் வெளிநாட்டில் இருந்து வந்த பிறகு அவரை விசாரணை செய்வதற்கு நடவடிக்கை எடுத்தோமா என்றால், சரியாக ஞாபகம் இல்லை. நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், முதலில் நான் அளித்த புகார் பொய்யானது என சமூக நலத்துறையால் முடிக்கப்பட்டுவிட்டது என்றால், சரியல்ல. நான் அதனால் ஆத்திரம்முற்று அவரது வழக்கறிஞர் அறிவிப்பினை பெற்ற பிறகு அவரது வீட்டிற்கு சென்று பிரச்சனை செய்ததால்தான் இரண்டாவது புகார் ஏற்பட்டது என்றால், சரியல்ல. நான் எனது கணவர் வீட்டிற்கு பதில் அறிவிப்பு கொடுத்தபின்பு சென்று பிரச்சனை ஏற்பட்டதா என்றால், இல்லை. அவர் அறிவிப்பு கொடுத்தபின்பு நான் சென்ற போதுதான் பிரச்சனை ஏற்பட்டது. எத்தனை நாட்கள் கழித்து நான் சென்றேன் என்றால், ஒரு ஐந்து நாட்கள் கழித்து சென்றேன். அன்றுதான் போலிசில் புகார் அளித்தேன் என்றால், ஆமாம்.

6) நான் வயது இடைவெளியை காரணம் காட்டி பிரச்சனை செய்து எனது அம்மா வீட்டிற்கு சென்றேன் என்றாலும், எவ்வளவோ எனது கணவர் சமாதானம் செய்தபோதும் நான் கேட்கவில்லை என்றால், சரியல்ல. எனக்கு குழந்தை எப்போது பிறந்தது என்றால், ஜனவரி-23, 2019. குழந்தை பிறக்கும்பொழுது அவர் வெளிநாட்டில் இருந்தார் என்றால், ஆமாம். அவருக்கு குழந்தை பிறந்த பின்பா அல்லது மருத்துவமனை செல்லும்பொழுதா எப்போது தகவல் கூறினோம் என்றால், குழந்தை பிறந்த பிறகு. அவர் எப்போது குழந்தையை பார்க்க வந்தார் என்றால், மூன்று

நாட்கள் கழித்து. மருத்துவமனைக்கு வந்தாரா என்றால், ஆமாம். எனது கணவர் மருத்துவமனைக்கு வந்து குழந்தையை தூக்கி என்னை அவரது வீட்டிற்கு அழைத்தாரா என்றால், இல்லை. குழந்தையை தூக்கவில்லை. என்னை அசிங்கமாக பேசி சண்டை போட்டுவிட்டு சென்றார். குழந்தையை பார்க்க ஆசையோடு எதிர் மனுதாரர் வந்தபோது எனது தந்தை எதுக்குடா வந்த என்று அடித்துவிட்டார் என்றாலும், நான் DNA சோதனை செய்தபின்புதான் குழந்தையை தூக்கவேண்டும் என குழந்தையை தூக்க மறுப்பு தெரிவித்தேன் என்றால், சரியல்ல. எனது மாமனார், மாமியார் குழந்தை பிறந்த அன்றே மருத்துவமனைவந்து குழந்தையை பார்த்தார்கள் என்றால், இல்லை.

7) அப்போதும் அவர்களிடம் சண்டை போட்டோம் என்றால், சரியல்ல. எனது கணவர் என்னுடன் சந்தோசமாக வாழ்ந்ததால்தான் குழந்தை பிறந்த மூன்று நாட்களில் குவைத்திலிருந்து வந்தார் என்றாலும், அவர் என்னை சந்தேகப்படவில்லை என்றாலும், நான்தான் ஏதோ ஒரு காரணத்தை மனதில் வைத்துக்கொண்டு DNA சோதனை எடுக்க கூறினேன் என்றால், இல்லை. அவர் சந்தேகப்பட்டார். வெளிநாட்டில் இருந்தபோது எனது கணவர் என்னுடன் போனில் பேசுவார் என்றால், இல்லை. பேசமாட்டார். நான் பேசுவேனா என்றால், நான் போன் செய்தால் அதனை எடுக்கமாட்டார். திருமணமான நாளில் இருந்து என்னுடன் எத்தனை நாட்கள் இருந்திருப்பார் என்றால், 45 நாட்கள் மட்டுமே என்னுடன் இருந்தார். அதன் பின்பு குவைத்தில்தான் இருந்தார். அந்த நாட்களில் அவர் என்னிடம் ஒரு முறை கூட பேசவில்லையா என்றால், இல்லை. குவைத்திலிருந்து வரும்பொழுது விடுமுறையில் என்னுடன் பேசுவாரா என்றால், இல்லை. பேசமாட்டார். குவைத்திலிருந்து எதிர் மனுதாரர் போன் பேசும்போது எனது அப்பா ஸ்பீக்கரில் பேச கூறுவார் என்றால், இல்லை.

8) அவரது அம்மாதான் அவ்வாறு கூறுவார். எனது அப்பாதான் ஸ்பீக்கரில் கேட்பார் என்றால், இல்லை. அவரது அம்மாதான் Headset ல் என்னிடம் ஒன்றையும் அவர் ஒன்றையும் வைத்துக்கேட்பார். போனில் பதிவு செய்தும் கேட்பார். நான் குழந்தை பிறப்பதற்காக எனது அம்மா வீட்டிற்கு சென்றேனா என்றால், எனக்கு உடல் நிலை சரியில்லாததால் சென்றேன். உடல் நிலை சரியில்லாததால் சென்றேனா என்றால், ஆமாம். அன்றிலிருந்து எனது அம்மா வீட்டில் இருந்துவிட்டேன் என்றால், ஆமாம். எனது கணவர் என்னை எனது வீட்டிற்கு வந்து அழைத்தார் என்றால், இல்லை. அதற்கு பஞ்சாயத்து நடந்ததா என்றால், என்னை அழைத்துப்போக கூறி பெரியோர்களை வைத்து பஞ்சாயத்து பேசினோம். யார் யாரை வைத்து பேசினோம் என்றால், எனது பெரியப்பா, மாமா, அவருடைய மாமா, சித்தப்பா வைத்து பேசினோம். பஞ்சாயத்தில் TNS. செல்லத்துரை கலந்துக்கொண்டாரா என்றால், ஆமாம். அந்த பஞ்சாயத்தில் TNS. செல்லத்துரை முடிவெடுத்து அதன்படி நான் எனது நகைகள் சீர் வரிசை ஜாமான்களை திரும்ப பெற்றுக்கொண்டேன் என்றால், எனக்கு போட்ட நகைகளை பெற்றுக்கொண்டேன். சாமான்கள் இன்னும் அவரிடம்தான் உள்ளது. எனது கணவருக்கு போட்ட நகைகளை குறித்து பஞ்சாயத்தில் முடிவு செய்தோமா என்றால், அப்போதைக்கு முடிவு செய்யவில்லை. அவருக்கு எத்தனை பவுன் நகைகள் செய்தோம் என்றால், எனக்கு 30 பவுன் போட்டார்கள். அவருக்கு எத்தனை பவுன் என ஞாபகம் இல்லை. மொத்தம் ஐம்பது பவுன் போட்டார்கள். நகைகள் போட்டால் எழுதிக்கொள்வது வழக்கம் என்றால், ஆமாம்.

9) அவ்வாறு எங்களது திருமணத்தில் எழுதிக்கொண்டார்களா என்றால், தெரியவில்லை. அவர்கள் வீட்டில் எனக்கு நகைகள் போட்டார்களா என்றால், மோதிரம் போட்டார்கள், தாலிசெயின் போட்டார்கள். மோதிரம், தாலிசெயின் என்னிடம் உள்ளது என்றால், மோதிரத்தை வாங்கிக்கொண்டார்கள். தாலிச்செயின் மட்டும் என்னிடம் உள்ளது. நாத்தனார் எனக்கு நகை செய்தார்களா என்றால், இல்லை. நாத்தனார் செய்வது வழக்கம் என்றால், வழக்கம்தான். ஆனால் அவர்கள் செய்யவில்லை. எனது கணவர் செய்த மோதிரம், தாலிச்செயின் எனது நாத்தனார் செய்த சீர்வரிசைகள் சாமான்கள் என்னிடம் தான் உள்ளது என்றாலும் நான் பொய்யாக இல்லை என கூறுகிறேன் என்றால், சரியல்ல. விவாகரத்து வழக்கு நிலுவையில் உள்ளது என்றால், ஆமாம். நான் விவாகரத்து வழக்கினை நடத்திவருகிறேன் என்றால், ஆமாம். நான் தனியாகவோ அந்த வழக்கிளோ எதிர் மனுதாரர் என்னுடன் சேர்ந்து வாழக்கோரி மனுத்தாக்கள் செய்யவில்லை என்றால், சரிதான். என்னுடைய விவாகரத்து வழக்கில் நான் தாக்கல் செய்துள்ள எதிர் உரையிலும் அவருடன் சேர்ந்து வாழ தயாராக உள்ளதாக கூறி தாக்கல் செய்யவில்லை என்றால்,

சரிதான். நான் சேர்ந்து வாழ தயாராக இல்லாத காரணத்தினால்தான் இந்நாள்வரை சேர்ந்து வாழ்வதற்கு எந்த மனுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரியல்ல.

10) அவர் என்னைவிட வயது அதிகமுள்ளவர் என்பதால் அவருடன் வாழ விரும்பாத காரணத்தினால் அவர் மீது பொய்யான காரணங்களை கூறி கிரிமினல் வழக்கு தாக்கல் செய்து குவைத்தில் இருந்த நபரை பிரகடன அறிவிப்பு அனுப்பி வரவழைத்து விட்டேன் என்றால், சரியல்ல. குவைத்திலிருந்து அவரை வரவழைத்ததற்கு நான்தான் ஏற்பாடு செய்தேன் என்றால், ஆமாம். அவர் இன்றுவரை இந்தக் காரணத்தினால் வெளிநாடு செல்லமுடியவில்லை என்றால், ஆமாம். எதிர் மனுதாரார் தற்போது என்ன செய்து வருகிறார் என்றால், தெரியவில்லை. குவைத்தில் என்னையும் எனது குழந்தையையும் நல்லமுறையில் வைத்துக்கொள்வதற்காக வேலை பார்த்த நபரை பொய்யான காரணங்களை கூறி இங்கு வரவழைத்து அவர் தற்போது வேலை இல்லாமல் டீக்கடையில் வேலை பார்த்து வருகிறார் என்றால், இல்லை. அந்த வேலையும் நிரந்தரம் இல்லாமல் தினக்கூலியாக தினமும் வேறு வேறு வேலை பார்த்து வருகிறார் என்றால், சரியல்ல. முதல் விசாரணையில் அவருக்கோ, அவரது பெற்றோருக்கோ இடம் இருப்பதாக ஆவணங்கள் ஏதும் தாக்கல் செய்யவில்லை என்றால், குருந்திராக்கோட்டையில் இடம் இருப்பதாக என்னை அழைத்துச்சென்று காட்டியுள்ளார்கள். நான் பொய்யாக கூறுகிறேன் என்றாலும், எனது கணவருக்கோ அவரது குடும்பத்தினருக்கோ எந்த சொத்தும் இல்லை என்றால், சரியல்ல.

11) எனது குழந்தை என்ன படிக்கிறது என்றால், UKG. எந்த பள்ளி என்றால், எனக்கு கூற பயமாக உள்ளது (சாட்சி அழுகிறார்). அறந்தாங்கியில்தான் குழந்தை படிக்கிறது என்றால், ஆமாம். குழந்தையை எதிர் மனுதாரர் பார்ப்பதற்கு ஆட்சேபனை உள்ளதா என்றால், இல்லை. நான் எதற்காக பள்ளியின் பெயரை சொல்ல மறுக்கிறேன் என்றால், குழந்தை வயிற்றில் உள்ள போதே அதனை கொல்லுவதற்கு அவர்கள் முயற்சி செய்ததால் எனக்கு பயமாக உள்ளது. எதிர்மனுதாரரோ அவரது குடும்பமோ குழந்தையை கொலை செய்ய முயற்சி செய்தார்கள் என எனது முதல் விசாரணையிலோ, புகாரிலோ, போலீஸ் விசாரணையிலோ, விவாகரத்து வழக்கிலோ கூறவில்லை என்றால், சரிதான். அவ்வாறு சம்பவம் நடக்கவில்லை என்பதால்தான் நான் கூறவில்லை என்றால், சரியல்ல. நான் வழக்கிற்காக பொய்யாக கூறுகிறேன் என்றால், சரியல்ல. எனது கணவர் என்னுடன் வாழ தயாராக இருந்தபோது நான் வயது மூத்தவர் என்பதனை காரணம் காட்டி அவரை புறக்கணித்து வாழ்ந்தேன் என்றாலும், அவர் என்னை சமாதானம் செய்ய முயற்சித்தும் நான் உடன்படாமல் இருந்ததால்தான் அவர் எனக்கு விவாகரத்து அறிவிப்பு அனுப்பினார் என்றால், சரியல்ல.

12) எனக்கு கிடைத்த தவறான ஆலோசனையின் கீழ் நான் பொய்யான காரணங்களுடன் பதில் அறிவிப்பு அனுப்பிய காரணத்தினால்தான் என் மீது விவாகரத்து வழக்கு தாக்கல் செய்ய வேண்டிய நிர்பந்தத்திற்கு எதிர்மனுதாரர் ஆளாக்கப்பட்டார் என்றால், சரியல்ல. நான் அவர் மீது மீண்டும் வன்மம் கொண்டு குவைத்திலிருந்து கிரிமினல் வழக்கு தாக்கல் செய்து, வரவழைத்து அவர் இங்கு தினக்கூலியாக வேலை செய்து வருகிறார் என்றால், சரியல்ல. நான் எனது பெற்றோர் வீட்டில் வசதியாக வாழ வேண்டும் என்பதற்காகவும், எனது கணவர் வீட்டிற்கு வந்தால் சிரமப்பட வேண்டியிருக்கும் என்பதால்தான் வாழ வர மறுக்கிறேன் என்றால், சரியல்ல. இடைக்கால ஜீவனாம்சம் மனுவில் கூடுதல் ஜீவனாம்சம் கோரி மேல்முறையீடு எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். இடைக்கால மனுவில் ஏற்பட்ட உத்தரவின்படி ஜீவனாம்சம் பெற்று வருகிறேன் என்றால், ஆமாம். நான் எனது கணவருடன் சேர்ந்து வாழ்வதற்கு எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளாத நிலையில், வேறு திருமணம் செய்துகொள்ள ஏற்பாடு நடந்து வருகிறதா என்றால், இல்லை. எனது செயல்பாடுகள் மற்றும் நடவடிக்கைகள் எனது குடும்பத்தாரின் நடவடிக்கைகளால்தான் எனது கணவர் என்னுடன் சேர்ந்து வாழ முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது என்றால், சரியல்ல.

13) எனவே, எனது கணவர் எனக்கு ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்றால், சரியல்ல. எனது கணவர் தினக்கூலியாக வேலை பார்த்து அவரது வயதான உடல்நிலை சரியில்லாத பெற்றோர், திருமணமாகாத தங்கையை பராமரிக்க வேண்டிய கடமையில் உள்ளதால், நான் கோரியுள்ள ஜீவனாம்சம் தொகையை கொடுக்க முடியாது என்றால், சரியல்ல. எனது மனுவில் கோரியுள்ள பரிகாரமானது எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால், சரியல்ல. நான்

கோரியுள்ள ஜீவனாம்ச தொகை அதிகப்படியானது என்றால், சரியல்ல. எனது குழந்தையை நல்ல முறையில் வளர்த்து ஆளாக்க தயாராக உள்ளார் என்றாலும், நான் தான் மறுத்து வருகிறேன் என்றால், சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தல்ல என்றால், சரியல்ல.